## எஸ்பிஐ அட்டைக்கான மிக முக்கியமான விதிமுறைகள் & நிபந்தனைகள்

1. கட்டணங்கள் மற்றும் அபராதங்கள்

A. வருடாந்திர கட்டணங்கள் & புதுப்பிப்பு கட்டணங்கள்

எஸ்பிஐ கடன் அட்டையில் (எஸ்பிஐ அட்டை) வருடாந்திர கட்டணங்கள் மற்றும் புதுப்பிப்பு கட்டணங்கள் வசூலிக்கப்படும். வருடாந்திர கட்டணம் என்பது ஒரே ஒருமுறை செலுத்தப்படும் கட்டணம் மேலும் புதுப்பித்தல் கட்டணம் ஒவ்வொரு வருடமும் வசூலிக்கப்படும். இந்த கட்டணங்கள் அட்டைதாரர்களுக்கு ஏற்ப, மற்றும் வெவ்வேறு விதமான அட்டைகளுக்கு ஏற்ப மாறுபடும். இவை கடன் அட்டைக்காக விண்ணப்பிக்கப்படும் நேரத்தில் அட்டைதாரரிடம் தெரிவிக்கப்படும். இந்த கட்டணங்கள் பொருந்தும் வகையில், நேரடியாக அட்டைதாரரின் கணக்கில் வசூலிக்கப்படும் மேலும் அது வசூலிக்கப்படும் மாதத்தின் அறிக்கையில் குறிப்பிடப்படும். முதன்மை அட்டைதாரருக்கு வழங்கப்படும் கூடுதல் அட்டைகளுக்காக தனிப்பட்ட கட்டணங்கள் விதிக்கப்படலாம்.

B. ரொக்க முன்தொகைக் கட்டணங்கள்

அட்டைதாரர் உள்நாட்டு/சர்வதேச ஏடிஎம்களில் அவசரத்திற்காக ரொக்கம் எடுக்க அட்டையை பயன்படுத்தலாம். அம்மாதிரியாக எடுக்கப்படும் அனைத்து தொகைகளுக்கும் ஒரு பரிவர்த்தனை கட்டணம் வசூலிக்கப்படும் மேலும் அது அடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டு அட்டைதாரருக்கு அனுப்பப்படும். பரிவர்த்தனை கட்டணத்தில் 2.5% அல்லது ரூ. 300, இதில் எது அதிகமோ அதை உள்நாட்டு ஏடிஎம்களிலும், 3% அல்லது ரூ. 300, இதில் எது அதிகமோ அதை சர்வதேச ஏடிஎம்களிலும் வசூலிக்கப்படும். பரிவர்த்தனைக் கட்டணம் எஸ்பிஐ கார்ட்ஸ் &

பேமெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிட்டெட் (எஸ்பிஐசிபிஎஸ்எல்)-ன் விருப்பத்தின் பேரில் மாற்றத்திற்கு உட்படலாம். அனைத்து ரொக்க முன்தொகைகளும் முழுத் தொகையும் செலுத்தப்படும் தேதி வரை ரொக்கம் எடுக்கப்பட்ட தேதியிலிருந்து சுழலும் கடன் (தயவுசெய்து கட்டணங்கள் பட்டியலை பரிந்துரை செய்யவும்) மீதான கட்டணங்களுக்கு சமமான ஒரு நிதிக் கட்டணத்திற்கு உட்படும்.

C. ரொக்கமாக பணம் செலுத்துதல் கட்டணங்கள்

அட்டைதாரர் எஸ்பிஐ வங்கிக் கிளைகளுக்கோ அல்லது எஸ்பிஐ அசோசியேட்ஸ் வங்கிக் கிளைகளுக்கோ சென்று, தன் கடன் அட்டை எண் & தொகையை பணம் செலுத்தும் இரசீதில் குறிப்பிட்டு அத்தொகையை கிளையின் கவுண்டரில் செலுத்துவதன் மூலம் எஸ்பிஐ அட்டை தவணை செலுத்தலாம். உங்கள் தொகைகளை செலுத்திய பிறகு, ஒரு உடனடி பணம் செலுத்துதல் ஒப்புதல் இரசீது வழங்கப்படும். இந்த சேவை ரூ. 100 + பொருந்தும் அனைத்து வரிகளுடன் கிடைக்கும்.

D. சிறப்புக் கட்டணங்கள்

i. அவ்வப்போது பொருந்தும் அபராதங்கள் மற்றும் கட்டணங்கள் அட்டைதாரருக்கு எஸ்பிஐசிபீஎஸ்எல்-ஆல் வழங்கப்படும் குறிப்பிட்ட சேவைகளுக்காக அல்லது அட்டைதாரர் தன் அட்டை கணக்கு தொடர்பாக செய்துள்ள தவணை தவறுதலுக்காக வசூலிக்கப்படும்.

ii அட்டைதாரருக்கு அனுப்பும் அறிவிப்புடன், பொருத்தமானதாக கருதப்பட்டால், ஏதேனும் அபராதங்கள் அல்லது கட்டணங்களை அவ்வளப்போது மாற்றவோ அல்லது ஏதேனும் புதிய அபராதம் அல்லது கட்டணங்களை அறிமுகப்படுத்தவோ எஸ்பிஐசிபீஎஸ்எல்-க்கு உரிமை உண்டு.

E. வட்டியில்லா சலுகைக் காலம்

வணிகரால் கோரப்படும் சமர்ப்பிப்புகளுக்கு உட்பட்டு 20 முதல் 50 நாட்கள் வரை வட்டியில்லா இலவச கடன் காலம் இருக்கக்கூடும். இருப்பினும், முந்தைய மாதத்தின் இருப்பு முழுதாக செலுத்தப்பட்டிருந்தால் அல்லது அட்டைதாரர் ஏதேனும் ஏடிஎம்-லிருந்து ரொக்கத்தை எடுத்திருந்தால் இது பொருந்தாது

F. நிதிக் கட்டணங்கள் (சேவைக் கட்டணங்கள்)

அட்டைதாரர் தன் இருப்பு முழுதாக செலுத்துவதை தேர்ந்தெடுக்காவிட்டால், மேலும் அட்டைதாரரால் எல்லா ரொக்க முன்தொகைகளையும் எடுத்திருந்தால், அவை அனைத்தும் திரும்பச் செலுத்தப்படும் வரை, பரிவர்த்தனை தேதியிலிருந்து செலுத்தப்படாத ஈஎம்ஐ தவணைகள் உள்ளிட்ட அனைத்து பரிவர்த்தனைகள் மீதும் மாதந்திர வட்டி வீதத்தில் நிதிக் கட்டணங்கள் வசூலிக்கப்படும். அட்டை வட்டி வீதம் மாறக்கூடியது மேலும் அது அட்டைதாரரின் பயன்பாடு மற்றும் பணம் செலுத்தும் முறைகளின் அடிப்படையிலானது மேலும் அது குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை மறுபார்வைக்கு உட்படும்.
செலுத்த வேண்டிய கடைசி நாளுக்குள் (பிடிடி) அட்டைதாரர் கடன் தொகையில், பகுதி தொகையையோ அல்லது நிலுவையில் உள்ள முழு பாக்கி செலுத்துகை தொகையையோ (டிஎடி) செலுத்த தவறினால், உதாரணமாக ஒரு குறிப்பிட்ட வாடிக்கையாளர் முந்தைய மாதங்களிலோ அல்லது தற்போதைய மாதத்திற்கான தொகையோ செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ளது என வைத்துக் கொண்டால், அவரது கணக்கில் உள்ள மொத்த நிலுவை தொகையையும் பணம் செலுத்த வேண்டிய தேதிக்கு முன்னர் முழுவதுமாக செலுத்தி இருக்க வேண்டும். மேலும், முடிவிருப்பு செலுத்துகை தேதி வரையான நிலுவை தொகைக்கு நிதி கட்டணங்கள் விதிக்கப்படும். தற்போதைய நிதிக் கட்டண வீதம் பரிவர்த்தனை தேதியிலிருந்து மாதம் ஒன்றுக்கு 3.35% [ஆண்டு

ஒன்றுக்கு 40.2%] மேலும் இது எஸ்பிஜ கார்ட்ஸ் & பேமெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிட்டெட் (எஸ்பிஜசிபீஎஸ்எல்)-ன் விருப்பத்திற்கேற்ப மாற்றத்திற்கு உட்படும். நிதிக் கட்டணங்கள் பொருந்தும் வரிகளுக்கு உட்படும் மேலும் அவை அட்டையின் நிலுவைத் தொகை முழுதாக செலுத்தப்படும் வரை அட்டைதாரரின் கணக்கில் பற்று வைக்கப்படும்.

a. ரொக்க முன்தொகைகள் மீதான நிதிக் கட்டணங்கள் பணம் முழுதாக செலுத்தப்பட்டால் தவிர பரிவர்த்தனைத் தேதியிலிருந்து வசூலிக்கப்படும்.

**எடுத்துக்காட்டு 1** – அட்டை அறிக்கை தேதி – ஒவ்வொரு மாதமும் 15ஆம் தேதி.

16 ஜூன் 2015 – 15 ஜூலைபிப்ரவரி 2015-க்கு இடையே செய்யப்பட்ட பரிவர்த்தனை

1. ரூ. 5000-க்கு சில்லறையாக வாங்கியவை – 20 ஜூன் 2015 அன்று
2. ரூ. 7000-க்கு ரொக்கம் எடுத்தல் – 10 ஜூன் 2015 அன்று

15 ஜூன் 2015 அறிக்கையில் எந்த முந்தைய இருப்பும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என எடுத்துக்கொண்டால், அட்டைதாரர் ரூ. 7000 ரொக்கமாக எடுத்த தொகை மீதான பொருந்தும் வீதத்தில் 5 நாட்களுக்கான நிதிக் கட்டணங்களுடன், ரூ. 12,000-க்கான பரிவர்த்தனைகளை காட்டும் 15 ஜூலை அறிக்கையைப் பெறுவார். அட்டைதாரர் நிலுவைத் தொகையை 5 ஆகஸ்ட் 2015-க்குள், அதாவது அறிக்கை தேதியிலிருந்து 20 நாட்களுக்குள், மொத்தத் தொகை அல்லது குறைந்தபட்ச தவணைத் தொகைக்கு இடையேயான ஏதேனும் தொகையை அட்டைதாரர் செலுத்த வேண்டும். உங்கள் கடன் அட்டை நிலுவைத் தொகைக்காக ஏதேனும் பணம் செலுத்தப்பட்டால் அது

உங்கள் குறைந்தபட்ச தவணைத் தொகை (அனைத்து பொருந்தும் வரிகள், ஈஎம்ஐ அடிப்படையிலான பொருட்களுக்கான ஈஎம்ஐ + மொத்த நிலுவைத் தொகையின் 5% ஆகியவற்றை உள்ளடக்கி), கையிருப்பு மாற்றுதல் இருப்பு (ஏதேனும் இருந்தால்) உடனான அபராதங்கள் மற்றும் மற்ற கட்டணங்கள் (ஏதேனும் இருந்தால்), சில்லறை இருப்பு (ஏதேனும் இருந்தால்) எனும்படி பூர்த்திசெய்யப்படும். நிதிக் கட்டணம் பரிவர்த்தனை தேதியில் வசூலிக்கப்பட்டால், வட்டியில்லாத சில்லறை இருப்பு நிலுவைத் தொகை என்றால் தவிர முந்தைய அறிக்கை தேதியில் நிதிக் கட்டணங்கள் வசூலிக்கப்படும்.

நிலுவைத் அறிக்கையில் எந்த ரொக்க இருப்பும் இல்லை மேலும் ஒரு முந்தைய அறிக்கையிலிருந்து கொண்டு வரப்படவில்லை எனில் மேலும் அறிக்கையில் சில்லறை இருப்பு நிலுவைத் தொகை தவணைத் தேதிக்கும் முழுதாக செலுத்தப்பட்டிருக்கிறது எனில், அம்மாதிரியான இருப்புகளுக்கு எந்த நிதிக் கட்டணங்களும் வசூலிக்கப்பட மாட்டாது.

**எடுத்துக்காட்டு 2** – அட்டை அறிக்கை தேதி – ஒவ்வொரு மாதமும் 2ஆம் தேதி.

3 ஜனவரி 2015 – 2 பிப்ரவரி 2015-க்கு இடையே செய்யப்பட்ட பரிவர்த்தனை

1. ரூ. 10000-க்கு சில்லறையாக வாங்கியவை – 5 ஜனவரி 2015 அன்று
2. ரூ. 30000-க்கு ஆன்லைனில் வாங்கியவை – 15 ஜனவரி 2015 அன்று

2 ஜனவரி 2015 அறிக்கையில் எந்த முந்தைய இருப்பும் சேர்த்துக்கொள்ளபடவில்லை எனில், அட்டைதாரர் ரூ. 40,000-க்கான பரிவர்த்தனைகளை காட்டும் 2 பிப்ரவரி அறிக்கையைப் பெறுவார். அட்டைதாரர் நிலுவைத் தொகையை 22 பிப்ரவரி

2015-க்குள், அதாவது அறிக்கை தேதியிலிருந்து 20 நாட்களுக்குள், மொத்தத் தொகை அல்லது குறைந்தபட்ச தவணைத் தொகைக்கு இடையேயான ஏதேனும் தொகையை அட்டைதாரர் செலுத்த வேண்டும்.

நிலுவைத் அறிக்கையில் எந்த ரொக்க இருப்பும் இல்லை மேலும் ஒரு முந்தைய அறிக்கையிலிருந்து கொண்டு வரப்படவில்லை எனில் மேலும் அறிக்கையில் சில்லறை இருப்பு நிலுவைத் தொகை தவணைத் தேதிக்கும் முழுதாக செலுத்தப்பட்டிருக்கிறது எனில், அம்மாதிரியான இருப்புகளுக்கு எந்த நிதிக் கட்டணங்களும் வசூலிக்கப்பட மாட்டாது.

ஒவ்வொரு மாதமும் வெறும் குறைந்தபட்ச தொகையை மட்டும் செல்ய்த்துதல் உங்கள் நிலுவை இருப்புத் தொகையில் அடுத்தடுத்து வட்டி சேருவதுடன் வருடக்கணக்கில் பணம் திருப்பிச் செலுத்துதலை நீட்டிக்கும். எடுத்துக்காட்டாக, ரூ. 5000 எனும் பரிவர்த்தனையில் ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்ச தவணைத் தொகை செலுத்தப்பட்டால் (ஒவ்வொரு மாதமும் ரூ. 200 எனும் குறைந்தபட்ச தொகைக்கு உட்பட்டு), மொத்த நிலுவைத் தொகையையும் முழுதாகச் செலுத்த 44 மாதங்கள் ஆகும்.

**எடுத்துக்காட்டு 3** –

அட்டை அறிக்கை தேதி – ஒவ்வொரு மாதமும் 2ஆம் தேதி.

3 மார்ச் 2015 – 2 ஏப்ரல் 2015-க்கு இடையே செய்யப்பட்ட பரிவர்த்தனை

1. ரூ. 500-க்கு ஆண்டு கட்டணம் – 5 மார்ச் 2015 அன்று
2. ரூ. 72.50-க்கு பொருந்தும் வரிகள் – 5 மார்ச் 2015 அன்று

3. ரூ. 6000-க்கு ஆன்லைனில் வாங்கியவை – 15 மார்ச் 2015 அன்று

2 மார்ச் 2015 அறிக்கையில் எந்த முந்தைய இருப்பும் சேர்த்துக்கொள்ளபடவில்லை எனில், அட்டைதாரர் ரூ. 6752.50-க்கான பரிவர்த்தனைகளை காட்டும் 2 ஏப்ரல் அறிக்கையைப் பெறுவார். மொத்தத் தவணைத் தொகை மொத்த எண்ணாக ரூ. 6573 என மாற்றப்படும். அட்டைதாரர் நிலுவைத் தொகையை 22 ஏப்ரல் 2015-க்குள், அதாவது அறிக்கை தேதியிலிருந்து 20 நாட்களுக்குள், மொத்தத் தொகை அல்லது குறைந்தபட்ச தவணைத் தொகைக்கு இடையேயான ஏதேனும் தொகையை அட்டைதாரர் செலுத்த வேண்டும்.

அட்டைதாரர் குறைந்தபட்ச தவணைத் தொகை ரூ. 368 (மொத்த நிலுவைத் தொகையில் 5%) + 22 ஏப்ரல் 2015-ல் பொருந்தும் வரிகள், இது அருகிலுள்ள தசம எண் மூலம் மொத்த எண்ணாக மாற்றப்படும், ஆகிய தொகையை செலுத்துவதாக கருதினால், நிதிக் கட்டணங்கள் சிறந்த வீதத்தில் வசூலிக்கப்பட்டு மொத்த நிலுவைத் தொகையுடன் சேர்க்கப்படும். சிறந்த வீதம் மாதம் ஒன்றுக்கு 3.35% என எடுத்துக்கொண்டால், நிதிக் கட்டண கணக்கீடு பின்வருமாறு செய்யப்படும்:

49 நாட்களுக்காக ரூ. 500 எனும் கையிருப்புக்காக (5 மார்ச் முதல் 22 ஏப்ரல் வரை): (3.35*12)*(49/365)*500/100= ரூ. 26.98

49 நாட்களுக்காக ரூ. 72.5 எனும் பொருந்தும் வரிகளுக்காக (5 மார்ச் முதல் 22 ஏப்ரல் வரை): (3.35*12)*(49/365)*72.50/100= ரூ. 3.91

39 நாட்களுக்காக ரூ. 6000 எனும் கையிருப்புக்காக (15 மார்ச் முதல் 22 ஏப்ரல் வரை): (3.35*12)*(39/365)*6000/100= ரூ. 257.72

10 நாட்களுக்காக ரூ. 6,175 எனும் கையிருப்புக்காக (22 ஏப்ரல் முதல் மே 2 வரை): (3.35*12)*(10/365)*6,175 /100= ரூ.68

வசூலிக்கப்படும் மொத்த வட்டி = ரூ. 356.61

இதில் 3 ஏப்ரல் 2015 – 2 மே 2015-க்கு இடையே பரிவர்த்தனைகள் எதும் மேற்கொள்ளப்படவில்லை என கருதினால், வாங்கியவற்றுக்கான நிலுவைத் தொகை, வட்டிக் கட்டணங்கள், அபராதம் மற்றும் கட்டணங்கள் ஏதேனும் இருந்தால் மற்றும் அனைத்து பொருந்தும் வரிகள் ஆகியவை மொத்த நிலுவைத் தொகையாக 2 மே தேதியிடப்பட்ட அறிக்கையில் காணப்படும்.

அட்டைதாரர் ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்ச நிலுவைத் தொகையை (5%) செலுத்தி வந்தால் மேலும் வட்டித் தொகையையும் செலுத்தி வந்தால், அவரின் நிலுவைத் தொகை 20 மாதங்களில் பூர்த்தியாகும் (100%/ 5% – 20).

உதாரணம் 4:

அட்டை அறிக்கை தேதி - ஒவ்வொரு மாதமும் 2 ஆம் தேதிக்குள்

3 டிசம்பர் 2015 முதல் 2016 ஜனவரி 2ஆம் தேதிக்கு இடைப்பட்ட நாட்களில் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகள்

1) சில்லறை கொள்முதல். 15 டிசம்பர் 15 ஆம் நாள் ரூ -- 500

2) ஆன்லைன் கொள்முதல் - 20 டிசம்பர் 15 அன்று ரூ .600

2 வது டிசம்பர் 2015 அறிக்கையில் எந்த முந்தைய நிலுவை தொகையும் கொண்டு வரப்படவில்லை என அனுமானிக்கப்பட்ட நிலையில், அட்டைதாரரின் பரிமாற்றங்கள் அவருக்கு 2 வது ஜனவரி வரையான அறிக்கையின் படி ரூ 1100 என காண்பிக்கப்படுகிறது. மொத்த செலுத்துகை நிலுவை தொகை ரூ 1100. அட்டையின் உரிமையாளர் 2016 ஜனவரி 22ஆம் தேதி வரை நிலுவையிலுள்ள பாக்கிக்காக ரூ 1100 செலுத்த வேண்டி இருக்கும். உதாரணமாக – அறிக்கையின் தேதியிட்ட நாளிலிருந்து 20

நாட்களுக்குள் முழு தொகையையோ அல்லது குறைந்த பட்ச தொகையையோ செலுத்த வேண்டும்.

அட்டைதாரர் ரூபாய் 500, பகுதி கட்டணமாக. 22 ஜனவரி 2016 அன்று செலுத்துகிறார் என வைத்துக்கொண்டால், மொத்த நிலுவைத் தொகையுடன் நிச்சயிக்கப்பட்ட விகிதத்தில் நிதி கட்டணங்கள் சேர்க்கப்படும் .
ரூபாய் 500 நிலுவை தொகைக்கு (15 டிசம்பர் முதல் ஜனவரி 22 வரை) 39 நாட்களுக்கு:
(3.35*12) * (39/365) *500/100 = Rs. 21.48
ரூபாய் 600 நிலுவை தொகைக்கு (20 டிசம்பர் முதல் ஜனவரி 22 வரை) 34 நாட்களுக்கு:
(3.35*12) * (34/365) *600/100 = Rs. 22.47
ரூபாய் 600 நிலுவை தொகைக்கு (22 டிசம்பர் முதல் பிப்ரவரி 2 வரை) 10 நாட்களுக்கு:

(3.35*12) * (10/365) *600/100 = Rs. 6.61
விதிக்கப்படும் மொத்த வட்டி =ரூபாய் 50.56
2016 பிப்ரவரி 3 முதல் 2016 மார்ச் 2ஆம் தேதி வரை மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகள்
1) 2016 பிப்ரவரி 3ஆம் தேதி வரையான தொடக்க இருப்பு ரூபாய் -- 650.56
2) ) 2016 பிப்ரவரி 5 ஆம் தேதி வரையான சில்லறை கொள்முதல். ரூபாய் -- 1000
3) 2016 பிப்ரவரி 15 ஆம் தேதி வரையான ஆன்லைன் கொள்முதல். ரூபாய் -- 3000
2016 பிப்ரவரி 2ஆம் தேதி வரையான அறிக்கையின் படி பாக்கி உள்ள நிலுவை தொகை ரூபாய் 650. 46 கணக்கிற்கு எடுத்து வரப்பட்டது என அனுமானித்தால்., உதாரணமாக – அறிக்கை வெளியிடப்பட்ட நாளில் இருந்து 20 நாட்களுக்குள் பாக்கி உள்ள

முழு நிலுவை தொகையோ அல்லது பாக்கி உள்ள நிலுவை தொகையின் ஒரு பகுதியையோ அட்டைதாரர் 2016 பிப்ரவரி 22 வரையான நிலுவை தொகைக்காக செலுத்த வேண்டும்.

கார்டு உரிமையாளர் பிப்ரவரி 15 க்குள் பாக்கி தொகையை முழுமையாக செலுத்தி முடித்துவிட்டார் என வைத்துக்கொள்வோம். உதாரணமாக – நிச்சயிக்கப்பட்ட வட்டி விகிதம் மாதத்திற்கு 3.35% என கருத்தில் கொண்டு, நிதி கட்டண கணக்கீடு பின்வருமாறு கணக்கீடு செய்யப்படும்:

ரூபாய் 650.56 நிலுவை தொகைக்கு ( பிப்ரவரி 3 முதல் பிப்ரவரி 15 வரை) 12 நாட்களுக்கு

விதிக்கப்படும் மொத்த வட்டி தொகை –ரூபாய் 8.60

நிலுவையில் உள்ள கொள்முதல் தொகை, விதிக்கப்பட்ட வட்டிகள், கட்டணம் மற்றும் பிற தொகைகள் ஏதேனும் இருந்தால் அவையும் மற்றும் பொருந்தக்கூடிய வட்டிகளும் செலுத்த வேண்டிய பாக்கி நிலுவை தொகையுடன் சேர்த்து மார்ச்ச 2 ஆம் தேதி வெளியிடப்பட்ட அறிக்கையில் பிரதிபலிக்கும்.

G. தாமதக் கட்டணங்கள்

குறைந்தபட்ச தவணைத் தொகை, தவணைத் தேதிக்குள் செலுத்தப்படாவிட்டால் தாமதக் கட்டணங்கள் வசூலிக்கப்படும்.

ரூ.0-ரூ.200; வரையான மொத்த நிலுவைத் தொகைக்கு எதுவுமில்லை; ரூ. 200-ஐ விட பெரிய & ரூ. 500 வரையான மொத்த நிலுவைத் தொகைக்கு ரூ.100; ரூ. 500-ஐ விட பெரிய & ரூ. 1000 வரையான மொத்த நிலுவைத் தொகைக்கு ரூ.400; ரூ. 1000-ஐ விட பெரிய & ரூ. 10,000 வரையான மொத்த நிலுவைத் தொகைக்கு ரூ.500; ரூ. 10.000-ஐ விட பெரிய மொத்த நிலுவைத் தொகைக்கு ரூ.750.

**எடுத்துக்காட்டு 1** – அட்டை அறிக்கை தேதி – ஒவ்வொரு மாதமும் 2ஆம் தேதி.

3 ஜனவரி 2015 – 2 பிப்ரவரி 2015-க்கு இடையே செய்யப்பட்ட பரிவர்த்தனை

1. ரூ. 5000-க்கு சில்லறையாக வாங்கியவை – 5 ஜனவரி 2015 அன்று
2. ரூ. 5000-க்கு ஆன்லைனில் வாங்கியவை – 15 ஜனவரி 2015 அன்று

2 ஜனவரி 2015 அறிக்கையில் எந்த முந்தைய இருப்பும் சேர்த்துக்கொள்ளபடவில்லை எனில், அட்டைதாரர் ரூ. 10,000-க்கான பரிவர்த்தனைகளை காட்டும் 2 பிப்ரவரி அறிக்கையைப் பெறுவார். அட்டைதாரர் நிலுவைத் தொகையை 22 மார்ச் 2015-க்குள், அதாவது அறிக்கை தேதியிலிருந்து 20 நாட்களுக்குள், மொத்தத் தொகை அல்லது குறைந்தபட்ச தவணைத் தொகைக்கு இடையேயான ஏதேனும் தொகையை அட்டைதாரர் செலுத்த வேண்டும்.

அட்டைதாரர் 22 பிப்ரவரி 2015-க்குள் பணம் செலுத்தாவிட்டால், அவருக்கு தாமதக் கட்டணமாக ரூ. 500 வசூலிக்கப்படும் (ரூ.1000-ஐ விட அதிகமாக & ரூ.10,000 வரை எனில் ரூ. 500).

**எடுத்துக்காட்டு 2** – அட்டை அறிக்கை தேதி – ஒவ்வொரு மாதமும் 2ஆம் தேதி.

3 பிப்ரவரி 2015 – 2 மார்ச் 2015-க்கு இடையே செய்யப்பட்ட பரிவர்த்தனை

3. ரூ. 2000-க்கு சில்லறையாக வாங்கியவை – 8 பிப்ரவரி 2015 அன்று

4. ரூ. 2500-க்கு ஆன்லைனில் வாங்கியவை – 19 பிப்ரவரி 2015 அன்று

2 பிப்ரவரி 2015 அறிக்கையில் எந்த முந்தைய இருப்பும் சேர்த்துக்கொள்ளபடவில்லை எனில், அட்டைதாரர் ரூ. 4500-க்கான பரிவர்த்தனைகளை காட்டும் 2 மார்ச் அறிக்கையைப் பெறுவார். அட்டைதாரர் நிலுவைத் தொகையை 22 மார்ச் 2015-க்குள். அதாவது அறிக்கை தேதியிலிருந்து 20 நாட்களுக்குள், மொத்தத் தொகை அல்லது குறைந்தபட்ச தவணைத் தொகைக்கு இடையேயான ஏதேனும் தொகையை அட்டைதாரர் செலுத்த வேண்டும்.

அட்டைதாரர் 22 மார்ச் 2015-க்குள் பணம் செலுத்தாவிட்டால், அவருக்கு தாமதக் கட்டணமாக ரூ. 500 வசூலிக்கப்படும் (ரூ.1000-ஐ விட அதிகமாக & ரூ.10,000 வரை எனில் ரூ. 500)

H. அளவு வரம்பு மீறல் கட்டணங்கள் – சேவையின் ஒரு பகுதியாக எஸ்பிஜ அட்டை அட்டைதாரர்களால் செய்யப்படும் கடன் வரம்புக்கு அதிகமான சில பரிவர்த்தனைகளுக்கு ஒப்புதலளிக்கலாம். நிலுவைத் தொகை கடன் வரம்பை மீறினால் மொத்த அளவு வரம்பு தொகையில் 2.5% அல்லது ரூ. 500, இதில் எது அதிகமோ அந்த அளவு வரம்பு மீறல் கட்டணத்தை வசூலிக்கும். அளவு வரம்பு மீறல் நிலைமை அபராதம் மற்றும்/அல்லது வட்டிக் கட்டணங்களுக்காகவும் வசூலிக்கப்படலாம்.

I. பண அவமதிப்பு கட்டணங்கள்
பண அவமதிப்பு நடந்தால், அட்டைதாரரிடம் குறைந்தபட்ச அபராதமாக ரூ. 350 முதல் தொகையில் 2% வரையான பண அவமதிப்புக் கட்டணம் வசூழ்லிக்கப்படும்

J. மற்றக் கட்டணங்கள்:

- அட்டை மாற்றுதல் கட்டணம்: ரூ. 100 – ரூ. 250
- கட்டண ரசீது திரும்பப் பெறுதல் கட்டணம்: ரூ. 225/
- (ரூபாய் 2000 வரை காசோலை மூலம் தொகை செலுத்தப்பட்டால்) காசோலை கட்டணம்: ரூபாய் 100
- காசோலை எடுத்துக்கொள்ளுதல் கட்டணம்: ரூ.90/-
- அறிக்கையை திரும்பப் பெறுதல் கட்டணம்: 2 மாதத்திற்கு மேலான அறிக்கைகள் எனில் அறிக்கை ஒன்றுக்கு ரூ. 100/- (எலைட் தவிர மற்ற அனைத்து வகையான அட்டைகளுக்கும் பொருந்தும்)அந்நிய செலாவணி பரிவர்த்தனை கட்டணம் 3.5% எலைட் அட்டைதாரர்களுக்கு மட்டும்) 1.99%.

வெளிநாட்டு பணப் பரிவர்த்தனையை இந்திய ரூபாயாக மாற்றுவதற்கு பயன்படுத்தப்படும் பரிமாற்ற வீதம் விசா/மாஸ்டர்கார்டால் தீர்மானிக்கப்படும், இந்நிலையில் பரிவர்த்தனை செய்யப்படும் தேதியன்று அவற்றால் நிர்வகிக்கப்படும் பரிமாற்ற வீதங்களின் அடிப்படையில், அப்பரிவர்த்தனை எஸ்பிஐ அட்டையால் தீர்க்கப்படலாம், இத்தேதி பரிவர்த்தனை செய்யபட்ட அதே தேதியாக இல்லாமலும் இருக்கலாம். வெளிநாட்டு பணப் பரிவர்த்தனைக் கட்டணமான 3.5% விசா/மாஸ்டர்கார்டால் பகிர்ந்துகொள்ளப்படும் தொகையான மாற்றப்படும் இந்திய ரூபாயில் பிடித்துக்கொள்ளப்படும். இந்திய ரூபாய் மதிப்பிற்கு மாற்றப்படும் வெளிநாட்டு நாணய பரிவர்த்தனைக்கான கட்டணம் விசா / மாஸ்டர் கார்டு பகிர்வு மூலம் பெறப்படும்

2. வரம்புகள்

கடன் வரம்பு மற்றும் ரொக்க வரம்பு ஆகியவை உட்புற எஸ்பிஐசிபீஎஸ்எல் கடன் வரையறையின் அடிப்படையில்

அட்டைதாரர்களிடம் ஒதுக்கீடு செய்யப்படும் (இணைப்பு அட்டைதாரர்கள் முதன்மை கணக்கு தாரரின் வரம்புகளையே பகிர்ந்துகொள்வார்கள்). இந்த வரம்புகள் அட்டை விநியோக நேரத்தில் அட்டைதாரரிடம் தெரிவிக்கப்படும். கடன் வரம்பு மற்றும் ரொக்க வரம்புகள் ஒவ்வொரு அறிக்கையிலும் அட்டைதாரருக்கு தெரிவிக்கப்படும். அறிக்கை உருவாக்கப்படும் நேரத்தில் இருக்கும் கடன் வரம்பு (அதாவது பயன்படுத்துவதற்கு கிடைக்கும் கடன் வரம்பு) அறிக்கையின் ஒரு பகுதியாக வழங்கப்படும். எஸ்பிஜசிபீஎஸ்எல் அட்டைதாரர் கணக்கை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை மறுபார்வை செய்யும், உட்புற வரையறையின் அடிப்படையில் அட்டைதாரர் கடன் வரம்பு அதிகரிக்கும் அல்லது குறையும். தங்கள் கடன் வரம்பை அதிகரிக்க நினைக்கும் அட்டைதாரர்கள் அதை எஸ்பிஜசிபீஎஸ்எல்-க்கு எழுதி, தங்கள் வருமானத்தை தெரிவிக்கும் நிதி ஆவணங்களை வழங்குவதன் மூலம் செய்யலாம். எஸ்பிஜசிபீஎஸ்எல் தன் சொந்த விருப்புரிமை மற்றும் வழங்கப்பட்டுள்ள புதிய ஆவணங்களின் அடிப்படையில், அட்டைதாரரின் கடன் வரம்பை அதிகரிக்கலாம்.

3. கட்டணப் பட்டியலிடல் மற்றும் அறிக்கை

a) எஸ்பிஜசிபீஎஸ்எல் அட்டைதாரருக்கு கடைசி அறிக்கையிலிருந்து அட்டைதாரரின் கணக்கில் வரவு வைத்துள்ள தொகைகள் மற்றும் பற்று வைத்துள்ள பரிவர்த்தனைகள் ஆகியவற்றை காண்பிக்கும் ஒரு மாதாந்திர அறிக்கையை அனுப்பும். அந்த காலகட்டத்தில் அட்டை செயல்பாட்டில் இருந்திருக்கும். எஸ்பிஜசிபீஎஸ்எல் ஒரு முன்னரே தீர்மானித்த தேதியில், அட்டை கணக்கில் உள்ள பரிவர்த்தனைகளின் அறிக்கையை பதிவில் உள்ள முகவரிக்கு அஞ்சல் செய்யும் அல்லது பதிவில் உள்ள மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யும்.

b) அட்டைதாரருக்கு கடன் அட்டைகள் ஒரு சுழற்சி கடன் வசதியாக வழங்குகின்றது. அறிக்கையில் அச்சிடப்பட்டுள்ள குறைந்தபட்ச தவணைத் தொகையை மட்டுமே செலுத்த அட்டைதாரர் தேர்ந்தெடுக்கலாம் மேலும் இம்மாதிரியான தொகை தவணைத் தேதிக்கு முன்பாக அனுப்பப்பட வேண்டும், இத்தேதி உங்கள் அறிக்கையிலும் அச்சிடப்பட்டிருக்கும். மீதமுள்ள நிலுவைத் தொகை அடுத்த அறிக்கைகளில் சேர்த்துக்கொள்ளப்படும். அட்டைதாரர் மொத்த தவணத் தொகையையோ அல்லது குறைந்தபட்ச தவணைத் தொகைக்கு அதிகமான ஏதேனும் தொகையையோ செலுத்துவதற்கு தேர்ந்தெடுக்கலாம். ஏதேனும் முந்தைய அறிக்கைகளின் குறைந்தபட்ச தவணை செலுத்தப்படாமலிருந்தால், அது அட்டைதாரர்களின் தற்போதைய குறைந்தபட்ச தவணைத் தொகையுடன் சேர்த்துக்கொள்ளப்படும், அட்டைதாரர்கள் கடன் வரம்பை மீறும் நிலுவைத் தொகையுடன் சேர்த்துக்கொள்ளப்படும்.

குறைந்தபட்ச தவணைத் தொகை நிலுவைத் தொகையின் 5% ஆகவோ அல்லது ரூ. 200 (இவற்றில் எது அதிகமோ அது) மற்றும் பொருந்தும் அனைத்து வரிகள் மற்றும் ஈஎம்ஐ (ஈஎம்ஐ அடிப்படையிலான தயாரிப்புகளுக்கு மட்டும்). ரொக்க அல்லது கடன் வரம்பு அளவை மீறினால், அளவுக்கு மீறிய தொகையும் (ஓவிஎல்), எம்ஏடில்-ல் சேர்க்கப்படும். ஏதேனும் முந்தைய அறிக்கைகளின் எம்ஏடி செலுத்தப்படாமல் இருந்தால், அதுவும் குறைந்தபட்ச தவணைத் தொகையில் சேர்த்துக்கொள்ளப்படும்.

c) அட்டையின் நிலுவைத் தொகைக்காக செலுத்தும் பணம் அடுத்தத்த அறிக்கைகளில் அங்கீகரிக்கப்படும்.

d) அட்டைதாரரின் அட்டை நிலுவைத் தொகைக்காக பெறப்படும் பணம் குறைந்தபட்ச தவணைத் தொகை (பொருந்தும் அனைத்து வரிகள் + ஈஎம்ஐ அடிப்படையிலான தயாரிப்புகள் மீதான ஈஎம்ஐ + மொத்த நிலுவைத் தொகையின் 5% ஆகியவற்றை உள்ளடக்கி), அபராதங்கள் & மற்ற கட்டணங்கள், வட்டி கட்டணங்கள், கையிருப்பு மாற்றுதல் நிலுவைத் தொகை, வாங்குதல் நிலுவைத் தொகை மற்றும் ரொக்க முன்தொகை என்ற வரிசையில் சரிசெய்யப்படும்.

e) அட்டைக் கணக்குக்கான தொகைகள் பின்வரும் வழிகளில் ஏதேனும் ஒன்றில் செய்யப்படலாம்:

www.sbicard.com இணையதளத்திற்குள் உள்நுழைந்து பேநெட் தேர்வைப் பயன்படுத்தி நெட்பேங்கிங் அல்லது உங்கள் எஸ்பிஐ ஏடிம் மற்றும் பற்று அட்டை மூலமாக பணம் செலுத்தலாம்.

அறிக்கையின் பின் பக்கத்தில் வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு ஒரு காசோலை அல்லது வரைவோலையை அனுப்புவதன் மூலமாக பணம் செலுத்தலாம்.

உங்கள் நகரத்தில் உள்ள எஸ்பிஐ விடு பெட்டிகள் அல்லது நியமிக்கப்பட்ட ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா கிளைகளில் ஒரு காசோலை அல்லது வரைவோலையை போடுவதன் மூலமாக பணம் செலுத்தலாம்.

காசோலை/வரைவோலை

“எஸ்பிஐ அட்டை எண் xxxx xxxx xxxx xxxx”-க்கு பணம் செலுத்தும்படி இருக்க வேண்டும்.

ஈசிஎஸ்: பணம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நகரங்களில் உள்ள எலக்ட்ரானிக் கிளியரிங் சிஸ்டம் (ஈசிஎஸ்) மூலமாக பணம் செலுத்தப்படலாம்.

f) எஸ்பிஐ அட்டை அறிக்கையில் உள்ள நிலுவைத் தொகைகளை செலுத்தும் பல்வேறு முறைகளை வழங்குகின்றது, இது மாதாந்திர அறிக்கையின் பின்புறத்திலும் எஸ்பிஐ அட்டை இணையதளத்திலும் விளக்கப்பட்டுள்ளது.

g) தவணைப் பட்டியல் பிரச்சினைகள்: அறிக்கைகளின் அனைத்து உள்ளடக்கங்களுக்காக, அட்டைதாரர் அறிக்கைத் தேதியிலிருந்து 30 நாட்களுக்குள், எஸ்பிஐசிபீஎஸ்எல்-இடம் ஏதேனும் முரண்பாடு இருந்தால் அதை தெரிவித்து, அந்த முரண்பாடுகள் எஸ்பிஐசிபீஎஸ்எல்-ஆல் சரியானவை எனக் கண்டறியப்படாவிட்டால், அந்த உள்ளடக்கங்கள் அட்டைதாரரால் சரியானவை என ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்படும். அப்படி ஏதேனும் முரண்பாடுகள் பற்றிய தகவல் பெறப்பட்டிருந்தால், எஸ்பிஐசிபீஎஸ்எல் தற்காலிகமாக அந்த கட்டணத்தை மாற்றியமைக்கலாம். அடுத்து வரும் ஆய்வுகள் முடிந்தால், அட்டைதாரரின் கணக்கே அதற்கான பொறுப்பை ஏற்ற்றுக்கொள்ள வேண்டும், அந்த கட்டணம், கட்டண ரசீதுக்கான ரூ. 225 எனும் கட்டண இரசீது பெறுதல் கட்டணத்துடன், அடுத்துவரும் அறிக்கையில் குறிப்பிடப்படும்.

h) வாடிக்கையாளர் குறைதீர்த்தல்: அனைத்து குறைகளும் ஒருங்கிணைப்பு அதிகாரி (நோடல் ஆ்ஃபிசர்), அ.பெ. எண் 29 – ஜிபீஓ, புதுடெல்லி – 110001 என்ற முகவரிக்கோ அல்லது என்ற nodalofficer@sbicard.com மின்னஞ்சலுக்கோ அனுப்பப்படும்.

i) தொடர்பு விவரங்கள்:

**அனைத்து தொலைபேசிகளிலிருந்தும் :** 39 02 02 02
(மொபைலிலிருந்து அழைக்கும்போது உங்கள் நகரத்தின் எஸ்டீடி குறியீட்டை முன்னால் இட வேண்டும்)
: 1860 180 1290
**எஸ்பிஐ ரெயில்வே கடன் அட்டைக்காக:** இந்தியாவிலிருந்து எங்கேயிருந்தும் எஸ்பிஐ ரெயில்வே கடன் அட்டை உதவி அழைப்பை தொடர்பு கொள்ளலாம்
**அனைத்து தொலைபேசிகளிலிருந்தும்** : 39 02 12 12
(மொபைலிலிருந்து அழைக்கும்போது உங்கள் நகரத்தின் எஸ்டீடி குறியீட்டை முன்னால் இட வேண்டும்) : 1800 180 1295

**அஞ்சல் முகவரி: மேலாளர்** – வாடிக்கையாளர் சேவைகள், எஸ்பிஐ கார்ட்ஸ் & பேமெண்ட் சர்வீசஸ் பி. லிட்., டிஎல்எஃப் இன்ஃபினிடி டவர்ஸ், டவர் சி, 12வது தளம், பிளாக் 2, பில்டிங் 3, டிஎல்எஃப் சைபர் சிட்டி குர்கான் – 12002 (ஹரியானா) இந்தியா www.sbicard.com அல்லது அ.பெ. எண் 28 – ஜிபீஓ, புதுடெல்லி - 110001 எனும் முகவரிக்கு அஞ்சல் மூலமாக எழுதுவதன் மூலமாக
feedback@sbicard.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு எழுதுவதன் மூலமாக

4. **தவணை தவறுதல்**

ஆர்பிஐ இடமிருந்து பதிவு சான்றிதழ் பெற்று எஸ்பிஐஉபிஎஸ்எல் இல் உறுப்பினராக இருக்கும் கடன் தகவல் கம்பெனிக்கு ஒரு கடன் அட்டை வைத்திருப்பவர் இயல்புநிலை பற்றி புகார் அளிக்கும் முன், நாங்கள் அட்டைதாரருக்கு முன் ஒரு மாதாந்திர 'அறிக்கையை அனுப்பப்படும்.

ஒரு அட்டைதாரர் இதற்கு முன் பணம் செலுத்த தவறியவர் என புகார் ஏதும் இருந்தால், அதன் தன்மையை பொருத்து, அவற்றை அவன் / அவள் பாக்கி உள்ள கடன் தொகையை செலுத்த வேண்டும்.

அதன் பின்னர், எஸ்பிஜசிபிஎஸ்எல் கடன் தகவல் நிறுவனத்திடமிருந்து கடன் செலுத்த தவறியவரின் நிலைமையை திரும்ப பெறும். இத்தகைய மாற்றங்கள் வாடிக்கையாளரின் கடன் அறிக்கையில் பிரதிபலிக்க 45-60 நாட்கள் வரை ஆகலாம்.

அதே போல், கடன் அட்டை வசதிகளை கையாளும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் சப்ளிமென்டரி/ ஆட் ஆன் அட்டைதாரருக்கும் பொருந்தும்.

(SBICPSL) எஸ்பிஜசிபிஎஸ்எல் பரிந்துரைக்கப்படும் வடிவத்தில் ஒவ்வொரு மாதமும் அட்டை உரிமையாளர்களின் தரவு விபரங்களை கடன் தகவல் அறிக்கை நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கும்.. கடன் தகவல் அறிக்கை நிறுவனம் 30 நாட்களுக்குள் தங்கள் சர்வரில் (வழங்கி) சமர்ப்பிக்கப்பட்ட தரவினை பதிவேற்றுகிறது.

தவணை தவறும்போது, அட்டைதாரருக்கு அஞ்சல், தொலைநகல், தொலைபேசி, மின்னஞ்சல், எஸ்எம்எஸ் செய்தி ஆகியவற்றின் மூலம் அட்டை கணக்கில் உள்ள ஏதேனும் நிலுவைத் தொகையை செலுத்துமாறு அவ்வப்போது நினைவூட்டிகள் அனுப்பப்படும் மற்றும்/அல்லது நினைவூட்ட, பின்தொடர மற்றும் தவணைகளை வசூலிக்க மூன்றாம் தரப்பினரை ஈடுபடுத்தலாம். நியமிக்கப்படும் ஏதேனும் மூன்றாம் தரப்பினர், கடன் வசூலிப்பதன் மீதான நடத்தை விதிமுறைகளுடன் முழுமையான இணங்கியிருக்க வேண்டும்.

முதன்மை அட்டைதாரரின் திவாலான நிலை அல்லது இறப்பின் போது, அட்டை கணக்கில் உள்ள மொத்த நிலுவைத் தொகை, இன்னும் அட்டை கணக்கில் வசூலிக்கப்படாத ஏதேனும் அபராதங்கள் உடன் சேர்த்து, எஸ்பிஜசிபீஎஸ்-இடம் உடனடியாக, முழுமையாக செலுத்தப்பட வேண்டும், மேலும் அட்டை கணக்கு

உடனடியாக இரத்து செய்யப்படும். அட்டை கணக்கின் ஏதேனும் நிலுவையிலுள்ள தொகையை செலுத்துவதில் முதன்மை அட்டைதாரரின் சொத்து பொறுப்புள்ளதாகும், மேலும் அம்மாதிரியான நிலுவைத் தொகையை மீட்பதில் ஆகும் சட்டரீதியான கட்டணங்கள் மற்றும் செலவுகள் உள்ளிட்ட, அனைத்து செலவுகளுக்காகவும் எஸ்பிஐசிபீஎஸ்எல்-க்கு தொடர்ந்து இழப்பீடு அளிக்க வேண்டும். இந்த மாதிரி திரும்ப செலுத்தும் தொகைகள் நிலுவையில் இருந்தால், அதன் முன்கூட்டியே இருக்கும் விலைகளுக்கு ஏற்க நிதிக் கட்டணங்களை தொடர்ந்து வசூலிக்க எஸ்பிஐசிபீஎஸ்எல்-க்கு உரிமை உண்டு.

5 அட்டை வைத்திருக்கும் உரிமையின் முடிவு/தள்ளுபடி செய்தல்

a) அட்டைதாரர் எஸ்பிஐசிபீஎஸ்எல்-க்கு எழுதுவதன் மூலம் அல்லது எஸ்பிஐ அட்டை உதவி தொலைபேசி எண்ணுக்கு அழைப்பதன் மூலம், மற்றும் அட்டையை(களை) குறுக்காக வெட்டுவதன் மூலம், எந்த நேரத்திலும் ஒப்பந்தத்தை முடித்துக்கொள்ளலாம். இணைப்பு அட்டைகள் (ஆட்-ஆன் கார்ட்கள்) உள்ளிட்ட அனைத்து அட்டைகளும் எழுத்துபூர்வ கோரிக்கையின் அடிப்படையில் முடிவுக்கு வரும். இந்த முடிவு அட்டையின் கணக்கில் உள்ள அனைத்து நிலுவையிலுள்ள தொகையும் செலுத்தப்பட்ட பிறகு பயன்பாட்டிற்கு வரும். ஆண்டுதோறுமான, சேர்க்கை அல்லது புதுப்பிப்பு கட்டணங்கள் எதுவும் ஒரு குறிப்பிட்ட விகிதத்தின் அடிப்படையில் திரும்ப அளிக்கப்பட மாட்டாது.

b) எஸ்பிஐசிபீஎஸ்எல் வணிக அல்லது பாதுகாப்பு காரணங்களுக்காக அவசியம் என நினைத்தால் மற்றும்/ அல்லது

ஏதேனும் சட்ட நடவடிக்கையெடுக்கும் முகமை, மற்றும்/அல்லது ஏதேனும் அரசாங்க ஆணையம் கோரிக்கை செய்தால், மற்றும்/அல்லது எஸ்பிஜசிபீஎஸ்எல் & அதன் வாடிக்கையாளருக்கு பொருந்தும் சட்டங்கள் & ஒழுங்குமுறைகளின் கீழ் பொருந்தினால், எஸ்பிஜசிபீஎஸ்எல் அட்டைதாரரின் கணக்கை எந்த நேரத்திலும் பயன்பாட்டை தடை செய்யலாம், முடிவுக்கு கொண்டு வரலாம் அல்லது இடைநிறுத்தலாம்.

அட்டைதாரர் நிலுவைத் தொகையை செலுத்தத் தசறினால் அல்லது கடன் வரம்பு அளவை விட மீறினால், கடன் அட்டை வசதியை எஸ்பிஜசிபீஎஸ்எல் இடைநிறுத்தலாம். அட்டை ஒப்பந்தம் முடிந்த பிறகோ அல்லது அட்டை கணக்கின் பயன்பாடு இடைநிறுத்தப்பட்டுள்ளபோதோ அந்த அட்டை கண்டிப்பாக பயன்படுத்தப்படக் கூடாது.

c) இது போன்ற ஒரு சூழ்நிலையில், அட்டைதாரர் (சட்டரீதியாக தேவைப்படும் ஏதேனும் தவணை தவறுதல் அல்லது பிற அறிக்கைக்கு உட்பட்டு) உடனடியாக கணக்கில் நிலுவையிலுள்ள மொத்தத் தொகையையும் எஸ்பிஜசிபீஎஸ்எல்-இடம் செலுத்த வேண்டும். இது ஒப்பந்தத்தின் கீழ் கணக்கில் இன்னும் வசூலிக்கப்படாமல் இருக்கும் அனைத்து பரிவர்த்தனைகள் மற்றும் மற்ற தொகைகள் உள்ளிட்ட, அனைத்துத் தொகைகளையும் உள்ளடக்கும். அட்டைதாரர் இம்மாதிரியான அனைத்து நிலுவைத் தொகைகளையும் செலுத்தும் வரை அட்டைதாரரின் கணக்கு மூடியுள்ளதாக கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

6. அட்டை தொலைந்துபோதல்/திருடுபோதல்/தவறாக பயன்படுத்தப்படுதல்

a) முதன்மை அல்லது ஏதேனும் கூடுதல் அட்டை தவறான இடத்தில் வைக்கப்பட்டிருந்தால், தொலைந்துபோனால், திருடப்பட்டால், உருக்குலைந்தால், பெறப்படாவிட்டால் அல்லது அட்டைதாரரின் அனுமதி இல்லாமல் கடன் அட்டை பயன்படுத்தப்படுவதாக சந்தேகித்தால், அட்டைதாரர் முடிந்தவரை உடனடியாக எஸ்பிஐசிபீஎஸ்எல்-ஐ தொடர்புகொள்ள வேண்டும். ஒரு அட்டை தொலைந்துவிட்டது என அறிக்கை செய்தால், அது அட்டைதாரருக்கு பின்னர் திரும்ப கிடைத்தால், எந்த சூழ்நிலையிலும் அதைப் பயன்படுத்தக் கூடாது, அட்டைதாரர் அந்த அட்டையை குறுக்காக இரண்டாக வெட்ட வேண்டும்.

- அட்டைதாரர் ஐவிஆர் அல்லது எங்கள் இணையதளம் sbicard.comorஅல்லது எஸ்எம்எஸ் அடிப்படையிலான சேவை மூலம் அட்டையை உடனடியாக தடை செய்யலாம்.
- எஸ்எம்எஸ் மூலம் உங்கள் தொலைந்த/திருடப்பட்ட அட்டையை தடை செய்ய, உங்கள் பதிவுசெய்யப்பட்ட மொபைல் எண்ணிலிருந்து வெறும் BLOCK XXXX என்ற செய்தியை 5676791 எனும் எண்ணுக்கு எஸ்எம்எஸ் செய்யவும். (XXXX = உங்கள் அட்டையின் எண்ணின் கடை நான்கு இலக்கங்கள் ஆகும்). உங்கள் கோரிக்கை செய்யப்பட்ட 5 நிமிடங்களுக்குள் ஒரு உறுதிப்படுத்தல் எஸ்எம்எஸ்-ஐ நீங்கள் பெறாவிட்டால், தயவுசெய்து அட்டை தடைசெய்யப்பட்டதாக கருதாதீர்கள். தயவுசெய்து உதவி மையத்திற்கு அழைப்பு விடுத்து உங்கள் அட்டையை உடனே தடை செய்யுங்கள் மேலும் ஏதேனும் தவறான பயன்பாட்டை தவிர்க்கவும்.

b) எஸ்பிஐசிபீஎஸ்எல்-இடம் அட்டை தொலைந்தது பற்றி அறிக்கை செய்யும் நேரத்திற்கு முன்னால் செய்யப்பட்டிருக்கும்

பரிவர்த்தனைகள் எதற்கும் எஸ்பிஐசிபீஎஸ்எல் பொறுப்பாகாது அல்லது பொறுப்பேற்காது, அதற்கு அட்டைதாரரே முழுப் பொறுப்பாவார். அட்டை தொலைந்தது அல்லது திருடுபோனது பற்றி எஸ்பிஐசிபீஎஸ்எல்-இடம் தெரிவிப்பதுடன், கூடுதலாக அட்டைதாரர் கடன் அட்டை(கள்) திருடுபோனது/தொலைந்தது பற்றி காவல்துறையிடம் புகார் செய்து ஒரு எஃப்ஐஆர்-ஐ தாக்கல் செய்ய வேண்டும். இருப்பினும், அட்டைதாரரின் சம்மதத்துடன், அல்லது கூடுதல் அட்டைதாரரின் சம்மதத்துடன் அட்டை அல்லது பின்னை பெற்று ஒருவர் தவறாக பயன்படுத்தினால் ஏற்படும் இழப்பு எல்லாவற்றிற்கும் அட்டைதாரரே பொறுப்பாவார்.

c) அட்டைதாரர் மோசடி செய்யும் விதத்தில் நடந்துகொண்டால், அவரே அனைத்து இழப்புகளுக்கும் பொறுப்பாவார். அட்டைதாரர் நியாயமான கவனமின்றி நடந்துகொண்டால், ஏற்படும் அனைத்து இழப்புக்கும் அவரே பொறுப்பாகலாம். இது அட்டைதாரர் எஸ்பிஐசிபீஎஸ்எல்-ஆல் குறிப்பிட்டுள்ளபடி பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றத் தவறினால் பொருந்தும்.

d) அட்டை அல்லது பின்னின் தொலைதல், திருட்டு அல்லது தவறான பயன்பாடு தொடர்பானது என எஸ்பிஐசிபீஎஸ்எல் கருதினால், அட்டைதாரர் அல்லது ஏதேனும் கூடுதல் அட்டைதாரருக்கு குறிப்பிடாமல் காவல்துறை அல்லது மற்ற பொருந்தும் அதிகாரிகளிடம் ஏதேனும் தகவல்களை அளிக்கலாம்.

e) உங்கள் கடன் அட்டை கணக்கின் மொபைல் எண் உள்ளிட்ட தொடர்பு விவரங்களில் செய்யப்படும் மாற்றங்கள் அமைப்பில் புதிய மற்றும் முந்தைய தொடர்பு விவரங்கள் உங்களுக்கு தெரிவிக்கப்படும். எங்கள் பதிவுகளில் மொபைல் எண்

உள்ளிட்ட உங்கள் தற்போதைய தொடர்பு விவரங்களைப் புதுப்பிப்பது ஆலோசிக்கப்படுகின்றது.

f) எஸ்பிஐ அட்டை சில குறிப்பிட்ட தொலைந்த / திருடப்பட்ட அட்டைகளுக்கு காப்பீடு வசதியும் வழங்குகிறது. எஸ்பிஐ கார்ட் மூலம் அறிவிக்கப்பட்ட படி இன்சூரன்ஸ் காப்பீடானது டாட்டா ஏஐஜி ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் அல்லது வேறு காப்பீட்டு நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகிறது. இது தொடர்பான அனைத்து பொறுப்புகளுக்கான தீர்வையும் டாட்டா ஏஐஜி ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் ஏற்கும். பொறுப்புகளின் தீர்வு காரணமாக எழும் எந்த மறுப்புகளுக்கும் எஸ்பிஐ அட்டை பொறுப்பு ஏற்காது. காப்புறுதி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பற்றிய மேலும் விவரங்களுக்கு, அட்டையின் உடைமையாளர்கள் வெல்கம் கிட்டில் உள்ள சிற்றேட்டை பார்க்கவும் அல்லது www.sbicard.com என்ற இணைய தளத்தில் சென்று பார்க்கவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்."

7. பிரகடனம்

கடன் தகவல்கள் நிறுவனம் இந்திய அரசு மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) யின் முதன்மை பெரு நிறுவனமாக விளங்குகிறது. இது இந்திய நிதி அமைப்பின் செயல்பாட்டு மற்றும் ஸ்திரத்தன்மையை மேம்படுத்தும் முயற்சியில் உள்ளது. ஆர்பிஐ யுடன் இணைந்து, இது வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு இடையில் பரிமாறப்படும் தகவல்கள் ஒரு பயனுள்ள இயங்கமைப்பாக்கும் முயற்சியில் ஈடுபடுகிறது. இதன் மூலம் அட்டைதாரர் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து கடன் வரம்புகளை பெறமுடிகிறது.

கார்டு உரிமையாளர் (SBICPSL) எஸ்பிஐசிபிஎஸ்எல் க்கு( அது ஆர்பிஐ இடமிருந்து பதிவு சான்றிதழ் பெற்றதாக இருக்கும் பட்சத்தில்.) ஒரு கடன் தகவல் நிறுவனத்திற்கு அட்டைதாரர்

தகவல்களை பகிர்ந்து கொள்ள அதிகாரம் உள்ளதை ஒத்துக்கொள்கிறது.

(SBICPSL) எஸ்பிஐசிபிஎஸ்எல் அட்டைதாரரின் திரும்பச் செலுத்துகை தொடர்பான தகவல்களை 45 –60 நாட்களுக்குள்ளான காலத்திற்குள் கடன் தகவல் நிறுவனத்திற்கு வழங்குவார்.

ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால், SBICPSL அட்டைதாரருக்கு தவறியவர் என்று புகாரளிப்பதற்கு முன்னதாக அத்தியாவசியமான மாற்றங்களையும் திருத்தங்களையும் செய்யும்.

ஆயினும், இது போன்ற சர்ச்சைகள் எழுந்தால் அல்லது வெளிப்படுத்துகை / ரிலீஸ் பற்றிய தகவல் கிடைத்தால், அல்லது (கான்டின்ஜென்ட்) நிபந்தனைக்குட்பட்டு அதன் தன்மையைப் பொருத்து வழக்கானது கவனத்தில் கொள்ளப்பட்டு தீர்த்து வைக்கப்படும்.

அட்டைதாரர் பற்றிய விவரங்களை ஏஎதேனும் ஏற்கனவே உள்ள அல்லது எதிர்கால கடனளிக்கும் அமைப்புகளிடம் அட்டைதாரருக்கு எந்த முன்னறிவிப்பும் இன்றி பகிர்ந்துகொள்ள எஸ்பிஐசிபீஎஸ்எல் அதிகாரமுள்ளவர் என அட்டைதாரர் அங்கீகரிக்கின்றார், மேலும் இம்மாதிரியான விவரங்கள் அட்டைதாரரின் நேர்மறையான அல்லது எதிர்மறையான செயல்பாடு/தவணை தவறுதலுடன் தொடர்புள்ளதாக இருக்கலாம். இம்மாதிரியான புதுப்பிப்பு கடனளிக்கும் அமைப்பின் அறிக்கையில் பிரதிபலிக்க 45-60 நாட்களை எடுத்துக்கொள்ளலாம்.

கடனளிக்கும் அமைப்புகள் இந்திய நிதியியல் அமைப்பின் செயல்பாடு மற்றும் நிலைப்புத்தன்மையை மேம்படுத்துவதற்காக இந்திய அரசு மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியால் (ஆர்பிஐ) தொடங்கப்பட்ட ஒரு முன்னெடுப்பாகும். இது வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு இடையே தகவல்

பரிமாறிக்கொள்வதற்கான ஒரு சிறப்பான செயல்முறையை வழங்கும் ஆர்பிஐ-ன் முயற்சிகளுடன் ஒத்துப்போகின்றது, இதனால் பல்வேறு நிறுவனங்களின் சிறப்பான கடன் வசதிகள் அட்டைதாரர்களுக்கு கிடைக்கின்றது.

அட்டை கணக்குகள், உறுதிப்படுத்தல் மற்றும் பிற நிர்வாக சேவைகளின் முறையான செயல்பாட்டிற்காக நிதி நிறுவனங்கள், முதலாளிகள் மற்றும் எஸ்பிஐசிபீஎஸ்எல் உடன் இணைந்துள்ள மூன்றாம் தரப்பினர்களிடம் பணம் செலுத்துதலில் உள்ள தவணை தவறுதல் உள்ளிட்ட அட்டைதாரரின் விவரங்களை பகிர்ந்துகொள்ள எஸ்பிஐசிபீஎஸ்எல்-க்கு அதிகாரம் உண்டு எனவும் அட்டைதாரர் அங்கீகரிக்கின்றார்.

எஸ்பிஐசிபீஎஸ்எல்-ன் பல்வேறு தயாரிப்புகள் மற்றும் சேவையை வழங்குதல் மற்றும் சந்தைப்படுத்துதல் நோக்கங்களுக்காக எஸ்பிஐசிபீஎஸ்எல்-ன் ஏதேனும் முதன்மை, துணை, கூட்டு அல்லது இணை நிறுவனங்கள் அல்லது அதன் குழு நிறுவனங்கள், துணை நிறுவனங்கள், சேர்க்கை நிறுவனங்கள், மற்றும் இணை நிறுவனங்களிடம், அட்டைதாரர் பற்றிய தகவலை வழங்கல எஸ்பிஐசிபீஎஸ்எல் மேலும் அட்டைதாரரின் விவரங்களை பகிர்ந்துகொள்ளலாம்.

எஸ்பிஐ அட்டை மிக முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு www.sbicard.com எனும் முகவரிக்கு வருகை செய்யவும்

முக்கியமான ஒழுங்குமுறை தகவல்

- அட்டையானது இந்தியாவில் மட்டுமல்லாமல் வெளிநாட்டிலும் செல்லுபடியாகும்.இருந்த போதிலும், இதனால் நேபால் மற்றும் பூடான் போன்ற நாடுகளில் வெளிநாட்டு நாணய பரிமாற்றங்களை செய்ய இயலாது. (செல்லுபடி ஆகாது).

எஸ்பிஐசிபீஎஸ்எல் விலையிடுதல் கொள்கை

- இந்தியாவுக்கு வெளியே ஆர்பிஐ செலாவணி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் மற்றும் அந்நியச் செலாவணி மேலாண்மை சட்டம், 1999 பொருந்தும் சட்டத்திற்கு இணங்க பரிவர்த்தனைக்காக அட்டையை பயன்படுத்த வேண்டும். இணைய வர்த்தக இணையதளங்கள் மூலம் அந்நிய செலாவணி வர்த்தகங்கள் அனுமதிக்கப்படுவதில்லை. ஏதேனும் மீறல்கள் நடவடிக்கைகள் மேற்கொண்டால் அல்லது இணங்க மறுத்தால், நீங்கள் தண்டனைக்குரியவராவீர்கள் என்பதைக் கவனத்தில் கொள்க. நீங்கள் உங்கள் அந்நியச் செலாவணி உரிமம் குறித்து உங்கள் அங்கீகரிக்கப்பட்ட முகவரிடம் (ஏடி) பரிசீலிக்க வேண்டும்

உங்கள் கடன் அட்டை கணக்கில் ஏதேனும் இருப்பு இருந்தால் எஸ்பிஐ கார்டு உங்களுக்கு இந்த தொகையை திருப்பி தர உரிமை உண்டு.வெளிநாட்டு நிறுவனங்களில் முதலீடு செய்யவோ அல்லது உறுப்பினர்களாவதற்காகவோ தயவு செய்து செலுத்துதலுக்கான கடன் அட்டைகளை பயன்படுத்த வேண்டாம். அதே போல், வெளிநாட்டில் கூட்டாக இணைந்திருப்பவர்கள் (ஜாயின்ட் வென்டார்) அல்லது முழு உரிமையுடைய துணை போன்றவர்களுக்கு ஆர்பிஐ யின் மாஸ்டர் டைரக்ஷன் டேரக்ட் இன்வெஸ்ட்மென்ட் இயக்கம் கீழ் நேரடி முதலீடுகள் அனுமதிக்கப்பட மாட்டாது.
குடியிருப்பாளர்களுக்கு இதர செலுத்துதல்களுக்கு ஆர்பிஐ மாஸ்டர் சர்குலர் - இதர மாஸ்டர் சுற்றறிக்கை படி, இந்தியா வசதிகள் செய்து தரும். தடை செய்யப்பட்ட பொருட்கள், லாட்டரி டிக்கெட்டுகள் தடை செய்யப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட இதழ்கள், அதிர்ஷ்ட குலுக்கல்களில் பங்குகொள்ளுதல், கால் – பேக் சேவைகளுக்கான கட்டணம், போன்றவற்றிற்காக கடன் அட்டை பயன்படுத்தி வாங்குவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது
எந்த drawal என்பதால் இதுபோன்ற விஷயங்களுக்கும்/ நடவடிக்கைகளுக்கும் அந்நிய செலாவணி முறையை பயன்படுத்துவதும் அனுமதிக்கப்படமாட்டாது.

எஸ்பிஐசிபீஎஸ்எல் விலையிடுதல் கொள்கை

1: கட்டணங்களின் பட்டியல்

| | |
|---|---|
| **கட்டணங்கள்** | |
| ஆண்டு கட்டணம் (ஒரு முறை | ரூ. 0 - ரூ. 4999 |
| புதுப்பிப்பு கட்டணம் (ஆண்டு ஒன்றுக்கு) | ரூ. 0 - ரூ. 4999 |
| இணைப்புக் கட்டணம் (ஆண்டு ஒன்றுக்கு) | எதுவுமில்லை |
| **நீட்டிக்கப்பட்ட கடன்** | |
| வட்டியில்லா கடன் காலம் | 20-50 நாட்கள் (சில்லறையாக வாங்குபவைகளுக்கு மற்றும் முந்தைய மாதத்தின் நிலுவைத் தொகை முழுதாக செலுத்தப்பட்டிருந்தால் மட்டுமே பொருந்தும்) |
| நிதிக் கட்டணங்கள்# | பாதுகாக்கப்படாத (அன்செக்யூர்ட்) அட்டைகள் எனில் மாதம் ஒன்றுக்கு 3.35% (ஆண்டு ஒன்றுக்கு 40.2%); பாதுகாக்கப்பட்ட (செக்யூர்ட்) அட்டைகள் எனில் மாதம் ஒன்றுக்கு 2.5% (ஆண்டு ஒன்றுக்கு 30%) |
| குறைந்தபட்ச நிலுவைத் தொகை | மொத்த நிலுவைத் தொகையில் 5% (குறைந்தபட்சம் ரூ. 200) + அனைத்து பொருந்தும் வரிகள் + ஈஎம்ஐ (ஈஎம்ஐ அடிப்படையிலான தயாரிப்புகள் எனில்) + ஓவிஎல் தொகை (ஏதேனும் இருந்தால்) |
| **ரொக்க முன்தொகை** | |

| | |
|---|---|
| ரொக்க முன்தொகை வரம்பு | கடன் வரம்பில் 80% வரை (அதிகபட்சமாக கோல்ட் மற்றும் டைட்டானியத்திற்கு நாள் ஒன்றுக்கு 12 ஆயிரம் & பிளாட்டினம் அட்டைகள் & சிக்னேச்சர் அட்டைகளுக்கு நாள் ஒன்றுக்கு 15 ஆயிரம்) |
| இலவச கடன் காலம் | எதுவுமில்லை |
| நிதிக் கட்டணங்கள்# | புதுப்பிக்கும் தேதியிலிருந்து மாதம் ஒன்றுக்கு 3.35%. (ஆண்டு ஒன்றுக்கு 40.2%) |
| ரொக்க முன்தொகை கட்டணங்கள் | |
| எஸ்பிஐ ஏடிஎம்கள்/மற்ற உள்ளூர் ஏடிஎம்கள் | பரிவர்த்தனைத் தொகையில் 2.5% (குறைந்தபட்சம் ரூ. 300-க்கு உட்படும்) |
| சர்வதேச ஏடிஎம்கள் | பரிவர்த்தனைத் தொகையில் 3.0% (குறைந்தபட்சம் ரூ. 300-க்கு உட்படும்) |
| **மற்றக் கட்டணங்கள் & அபராதங்கள்** | |
| ரொக்கமாக செலுத்துதல் கட்டணம் | ரூ.100 |
| காசோலையை எடுத்துக்கொள்ளுதல் | ரூ. 90 |
| பண அவமதிப்புக் கட்டணம் | காசோலைத் தொகையில் 2% (குறைந்தபட்சம் ரூ. 350-க்கு உட்படும்) |
| அறிக்கை மீட்பு | அறிக்கை ஒன்றுக்கு ரூ. 100 (>2 மாதங்கள் பழையது) |
| (காசோலை செலுத்துகை | தொகை ரூ 2000 க்கும் மேல்) காசோலை கட்டணம் ரூ.100 |

| | |
|---|---|
| கட்டணச் சீட்டு மீட்பு | |
| தாமதக் கட்டணம் | ரூ.0-ரூ.200; வரையான மொத்த நிலுவைத் தொகைக்கு எதுவுமில்லை;<br>ரூ. 200-ஐ விட பெரிய & ரூ. 500 வரையான மொத்த நிலுவைத் தொகைக்கு ரூ.100;<br>ரூ. 500-ஐ விட பெரிய & ரூ. 1000 வரையான மொத்த நிலுவைத் தொகைக்கு ரூ.400;<br>ரூ. 1000-ஐ விட பெரிய & ரூ. 10,000 வரையான மொத்த நிலுவைத் தொகைக்கு ரூ.500;<br>ரூ. 10.000-ஐ விட பெரிய மொத்த நிலுவைத் தொகைக்கு ரூ.750; |
| அளவு வரம்பை மீறுதல் | அளவு வரம்பின் 2.5% (குறைந்தபட்சம் ரூ. 500-க்கு உட்படும்) |
| அட்டையை மாற்றுதல் | ரூ. 100 – ரூ. 250 |
| அவசரநிலை அட்டையை மாற்றுதல்<br>(வெளிநாட்டில் இருக்கும்போது) | உண்மையான விலை (குறைந்தபட்சம் $175) |
| வெளிநாட்டு பணப் பரிவர்த்தனை | 3.5% (எலைட் தவிர மற்ற அனைத்து அட்டைகளுக்கும்)<br>1.99% (எலைட் அட்டையின் உடைமையாளர்களுக்காக மட்டும்) |
| பரிசுகள் மீட்புக் கட்டணம் | ரூ. 99 |
| **கூடுதல் கட்டணம்** | |

| | |
|---|---|
| ரயில்வே பயணச்சீட்டுகள் – ரயில்வே கவுண்டர்கள் | பரிவர்த்தனைத் தொகையில் ரூ. 30 + 2.5% |
| ரயில்வே பயணச்சீட்டுகள் - www.irctc.co.in | பரிவர்த்தனைத் தொகையில் 1.8% + சேவைக் கட்டணம், பொருந்துவதற்கு ஏற்ப |
| பெட்ரோல் & அனைத்து விற்கப்பட்ட தயாரிப்புகள்/சேவைகள் | பரிவர்த்தனை மதிப்பில் 1 % அல்லது ரூ. 10 இதில் எது அதிகமோ அது<br>சிக்னேச்சர் & பிளாட்டினம் அட்டைகள் எனில் ரூ.500 மற்றும் ரூ.4000-க்கு இடையே செய்யப்படும் ஒரு பரிவர்த்தனைக்கு 1 % கூடுதல் கட்டண உரிமை துறப்பு (அனைத்து பொருந்தும் வரிகள் + மற்ற கட்டணங்கள் சேர்க்காமல்); மற்ற அனைத்து அட்டைகளுக்கும் ரூ.500 மற்றும் ரூ.3000-க்கு இடையேயான பரிவர்த்தனை. |
| பெட்ரோல் பம்புகளில் | சிக்னேச்சர் & பிளாட்டின் அட்டைகள் எனில் கடன் அட்டை கணக்கு ஒன்றுக்கு அறிக்கை சுழற்சி ஒன்றுக்கு ரூ. 250 எனும் அதிகபட்ச கூடுதல் கட்டண உரிமை துறப்பு; மற்ற அனைத்து அட்டைகளுக்கும் கடன் அட்டை கணக்கு ஒன்றுக்கு ரூ.100. |
| சுங்க வரி செலுத்துதல் | பரிவர்த்தனை தொகையில் 2.25% (குறைந்தபட்சம் ரூ. 75) |

## எஸ்பிஜசிபீஎஸ்எல் விலையிடுதல் கொள்கை

மேலேயுள்ள அனைத்து கட்டணங்கள், வட்டிகள் & அபராதங்களுக்காக அனைத்து பொருந்தும் வரிகளும் வசூலிக்கப்படும்.

- "பொருந்தக்கூடியவரிகள்" (2017 ஆம்ஆண்டு ஜூலை 1 ஆம் தேதி அல்லதுஅதற்குபின்வெளியிடப்பட்டஅறிக்கைகளுக்கு):

- *அறிக்கையின்அடிப்படையில்குறிப்பிட்ட தேதியில்எஸ்.பி.ஐ. அட்டையின்பதிவுகளின் படி , "ஹரியானா" மாநிலத்தில் வசிக்கும் அந்த மாநிலத்தை சேர்ந்த அட்டைதாரர்களுக்கு@9%சதவிகிதமத்தியவரிமாநிலவரி@ 9%

- *அறிக்கையின்அடிப்படையில்குறிப்பிட்ட தேதியில் எஸ்.பி.ஐ. அட்டையின்பதிவுகளின் படி , "ஹரியானா" மாநிலத்தின்வசிக்கும் அந்த மாநிலத்தவர் அல்லாத அட்டைதாரர்களுக்குஒருங்கிணைந்த வரி @ 18%

ஒரு அட்டைதாரர் கணக்கிற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து பணம் செலுத்தல்களும் குறைந்தபட்ச நிலுமைத் தொகை (இது அனைத்துப் பொருந்தும் வரிகள் + ஈஎம்ஐ அடிப்படையிலான பொருட்கள் மீதான ஈஎம்ஐ, + 50% மொத்த நிலுவைத் தொகை ஆகியவற்றை உள்ளடக்கும்), கட்டணங்கள் & மற்ற அபராதங்கள், வட்டி வசூலிப்புகள், கையிருப்பு மாற்ற நிலுவைத் தொகை, வாங்கியவைகளுக்கான நிலுவைத் தொகை மற்றும் ரொக்க முன்தொகை போன்றவைகளுக்காக செய்யப்படலாம்*